## 156. உம் கரம் குறுகவில்ல

பல்லவி

உம் கரம் குறுகவில்ல
உம் கரம் முடங்கவில்ல

அனுபல்லவி

இன்றைக்கும் அற்புதம்
இன்றைக்கும் அதிசயம்
செய்து கொண்டு இருக்கின்றதே

சரணங்கள்

1. வனாந்திரத்தில் ஜனங்கள் கேட்ட
இறைச்சியை கொண்டு வந்து கொடுத்திட
கீழ்க்காற்றை அனுப்பி வைத்தீர்
காடையினால் வனாந்திரம் நிரம்பியதே
- இன்றைக்கும்

2. இஸ்ரவேலரை பின்சென்ற
எகிப்தின் சேனைகளெல்லாம்
வனாந்திரத்தில் கலங்கடித்த
உந்தன் கரமல்லவா
- இன்றைக்கும்

3. செங்கடலை இரண்டாய் பிரித்துவிட்டு
வெட்டாந்தரையில் நடத்தினரே
பின் சென்ற எதிரிகளை
கடலில் முழ்கடித்த கரமே
- இன்றைக்கும்